சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No.120/2023

பெயர். திரு. சுரேஷ் (எ) சுரேஷ் குமார் நாள். 17.02.2026
த/பெ.செல்லமுத்து

**<u>எதிர் மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1) நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். தினமும் ரூ.1200/– அதற்கு கூலி. நான் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வருகிறேன். நான் எனது சொத்து விவரங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. திருமணத்தின் போது எத்தனை சவரன் நகைகள் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. திருமணத்தின் போது பல்சர் இரு சக்கர வாகனம் எனக்கு கொடுத்தார்கள். அந்த இரு சக்கர வாகனம் தற்போது என்னிடம் தான் உள்ளது என்றால் மனுதாரரிடம் தான் உள்ளது. திருமணத்தின் போது எனக்கு 3 சவரன் நகைகளும், மனுதாரருக்கு 10 சவரன் நகையும் அணிவித்தார்கள் என்றால் இல்லை, நிச்சயதார்த்தத்தின் போது 1 சவரன் செயின் அணிவித்தார்கள். மொத்தம் 13 சவரன் நகை போட்டார்கள் என்றால் சரியல்ல.

2) திருமணம் முடிந்து 2 வாரங்கள் எங்கள் ஊரில் வாழ்ந்தோம். அதன் பின்பு சென்னையில் உள்ள கண்ணகி நகரில் வாடகை வீடு எடுத்து வாழ்ந்தோம்.

சென்னையில் உள்ள வீட்டை திருமணத்திற்கு முன்பே வாடகைக்கு எடுத்தேன். நதியா என் மூத்த சகோதரி என்றால் சரிதான். அவர் வீட்டருகே தான் நான் வாடகைக்கு வீடு எடுத்து தங்கினேன் என்றால் சரியல்ல. சென்னை கண்ணகி நகரில் வாழ்ந்த போது எனக்கும், மனுதாரருக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். அங்கு நாங்கள் கூட்டுக் குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். கண்ணகி நகரில் 2 மாதங்கள் வாழ்ந்து வந்தோம். அதன் பின்பு பட்ரோட்டில் வாடகைக்கு குடியேறினோம். அந்த வீட்டிற்கு மனுதாரர் குடும்பத்தினர் தான் செலவு செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த வீட்டில் குத்தகைக்கு தான் குடியிருந்து வந்தோம். அந்த வீட்டருகே தான் என் சகோதரி நதியா குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

3) என் சகோதரி அடிக்கடி என் வீட்டிற்கு வருவார் என்றால் இல்லை. அந்த வீட்டை குத்தகைக்கு எடுப்பதற்காக மனுதாரரை அவரது பெற்றோரிடமிருந்து ரூ.3 லட்சம் பெற்று வர சொன்னேன் என்றால் சரியல்ல. அந்த வீட்டில் சுமார் 3 வாரங்கள் மட்டுமே குடியிருந்தோம். அந்த ரூ.3 லட்சம் பணத்தை நானும், என் சகோதரி நதியாவும் சேர்ந்து மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தி ஒரு அறையில் அடைத்து வைத்தோம் என்றால் சரியல்ல. மனுதாரரின் தந்தை என்னிடம் தொகை கேட்டதால் மனுதாரர் என்னை விட்டு பிரிந்து விட்டார். மனுதாரரை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அனுமதித்தனர் என்றால் எனக்கு

தெரியாது. நானும், என் சகோதரியும் மனுதாரரை அடித்து வீட்டில் பூட்டி வைத்தோம் என்றாலும், அதனால் வீட்டின் உரிமையாளர் மனுதாரரை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றால் சரியல்ல.

4) கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் நானும், நதியாவும் மனுதாரரை அடித்து காயப்படுத்தினேன் என்று குறிப்பு உள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. மருத்துவமனையில் மனுதாரரை சேர்த்த விவரத்தை அவர் வீட்டில் நான் தெரிவிக்கவில்லை என்றால் மனுதாரர் மருத்துவமனையில் சேர்ந்த விவரமே எனக்கு போலிசார் சொல்லி தான் தெரியும். எந்த போலிசார் தகவல் தெரிவித்தார்கள் என்றால் மனுதாரரின் மூத்த சகோதரி அளித்த புகாரின் பேரில் ஆலந்தூர் காவல் துறையினர் எனக்கு தெரிவித்தார்கள். 04.11.2022 அன்று ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் மனுதாரர் என்ன புகார் அளித்தார் என்றால் வரதட்சணை கொடுமை என்று புகார் அளித்துள்ளார். அங்கு மனுதாரரிடம் பொருட்கள் மற்றும் நகைகளை திரும்ப ஒப்படைக்குமாறு கூறினார்கள். நானும் மறுநாள் ஒப்படைத்து விட்டேன். என்னென்ன பொருட்கள் ஒப்படைத்தேன் என்றால் மனுதாரர் கொடுத்த பொருட்களை அப்படியே ஒப்படைத்து விட்டேன். என்னென்ன பொருட்கள் கொடுக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு பொருட்களை திரும்ப கொடுக்கவில்லை என்று 19.12.2022 அன்று சூளைமேடு காவல் நிலையத்தில் மனுதாரர் புகார்

அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சூனாம்பேடு காவல் துறையினர் ஏன் பொருட்களை ஒப்படைக்கவில்லை என்று கேட்டார்களா என்றால் அவ்வாறு கேட்கவில்லை. ஏன் மனுதாரர் வீட்டிற்கு சென்றேன் என்று கேட்டார்கள்.

5) சூனாம்பேடு காவல் நிலையத்தில் 10 நாட்களில் திரும்ப பொருட்களை ஒப்படைப்பதாக உறுதியளித்துவிட்டு சென்றேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது எனக்கு கொடுக்கப்பட்ட இரு சக்கர வாகனம், அதன் பதிவு சான்றிதழ் மற்றும் மனுதாரரின் பத்தாம் வகுப்பு சான்றிதழ் ஆகியவற்றை மனுதாரரிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் சேர்ந்து வாழ்வதாக கூறி உறுதியளித்தேன் என்றால் சரியல்ல. செங்கல்பட்டு மாவட்ட சமரச மையத்தில் எனக்கு அழைப்பாணை வந்தது. சமரச மையத்தில் மனுதாரருடன் சேர்ந்து வாழ மாட்டேன் என்று நான் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் வற்புறுத்தியதன் பேரில் எழுதிக் கொடுத்தேன். யார் அவ்வாறு வற்புறுத்தினார்கள் என்றால் அங்கிருந்த அதிகாரிகள் என்னை வற்புறுத்தினார்கள். செய்யூர் நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள வழக்கு பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 30.10.2023 தேதியில் மனுதாரர் எனக்கு வழக்கு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் எனக்கு வரவில்லை. ம.த.சா.ஆ.11 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது

தான். அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். செய்யூர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கை திரும்ப பெற்று கொண்டால் சேர்ந்து வாழ தயாராக உள்ளதாக சமரச மையத்தில் கேட்டுக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரருடன் சேர்ந்து வாழ கூடாது என்பதற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே மனுப்படி தீர்ப்பாக எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**